1982 பிப்ரவரி 6]

திரு. து. புருஷோத்தமன் : திருவள்ளுவர் போக்குவரத்து கழகத்தில் பத்திரிகை ஆசிரியர்கள், நிருபர்களுக்கு இலவசமாகப் போக அனுமதி வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொழிலாளர்களுடைய குழந்தைகளுடைய பக்கத்தில் இருந்து வேறு பக்கம் போயிருக்கிறார்கள். அதைப் பற்றி தனிக் கேள்வி போட வேண்டும். இருந்தாலும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் அனுமதிக்க முடியாத நிலைமையில் இருக்கிறோம். மற்றப் போக்குவரத்துக் கழகங்களில் விரிவு படுத்தியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேவகோட்டை—கன்னங்குடி நகரப் பேருந்துப் பணி

*வினா எண். 79—திரு. ச. அங்குசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேவகோட்டை நகராட்சியிலிருந்து கன்னங்குடி வரைக்கும் நகரப் பேருந்து விட அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) மற்றும் (ஆ) தேவகோட்டை—கன்னங்குடி வழி தடத்தில் இரண்டு பேருந்துகள் 14 தனி நடைகள் சென்றுகொண்டிருந்தன. 8—5—1981 முதல் தேவகோட்டை—கன்னங்குடிக்கு இடையே இரண்டு கூடுதல் தனி நடைகள் செல்ல பாண்டியன் போக்குவரத்து கழகத்தின் பேருந்துக்கு அனுமதி வழங்கப்பட்டு உள்ளது. புள்ளி விவர கணக்கின்படி பயணிகளின் விகிதாசாரம் குறைவாக இருப்பதால் தேவகோட்டை—கன்னங்குடி வழித் தடத்தில் நகரப் பேருந்து விடுவதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை.

திரு. ச. அங்குசாமி : கன்னங்குடி ஊராட்சி ஒன்றியத்தைப் பொறுத்த வரையில் அதைச் சுற்றியுள்ள கிராமங்கள் எல்லாம் போக்குவரத்து வசதியில்லாத இடங்களாக இருக்கின்றன. அந்த இடங்களுக்குச் செல்ல வேண்டுமென்றால் கன்னங்குடிக்கு வந்து தான் போகக் கூடிய நிலைமை இருக்கிறது. அதைப் போலவே மற்ற நகரங்களுக்கோ அல்லது பெரிய இடங்களுக்கோ செல்வது என்றால் கன்னங்குடிக்கு வந்துதான் செல்லக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே கன்னங்குடியிலே நகரப் பேருந்து விடுவதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: ஏற்கனவே இரண்டு பேருந்துகள் 14 தனி நடைகள் போய்க் கொண்டிருக்கின்றன. அதற்கே தேவையான பயணிகள் இல்லை, ஓடிக்கொண்டிருக்கின்ற பேருந்துகள் குறைந்த வருமானத்தை ஈட்டிக் கொண்டிருக்கின்றன ஆகவே முடியாது என்று சொன்னோம். இருந்தாலும் நகரப் பேருந்து வேண்டுமென்று குறிப்பாகச் சொல்கின்ற காரணத்தி னால் மீண்டும் பரிசீலனை செய்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. கே. ஆர். சுந்தரம்: நகரப் பேருந்துகள் விடப்படு வதற்கு 30 கிலோ மீட்டர் என்ற வரம்பு வைக்கப்பட்டிருக்கிறது. அதனால் வேலூர்—குடியாத்தம், குடியாத்தம்—காட்பாடி என்ற இடங்கள் முப்பதரை கிலோ மீட்டர், 31 கிலோ மீட்டர் என்று இருப்பதால் நகரப் பேருந்துவிட முடியாது என்ற நிலை இருக் கிறது. அதை மாற்றி 35 கிலோ மீட்டர் வரையில் நகரப் பேருந்துகள் விடலாம் என்று கொண்டு வருவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: ஏற்கனவே 25 கிலோ மீட்டர் என்று இருந்தது, அதற்காகத்தான் 30 கிலோ மீட்டராக உயர்த்தப்பட்டது. இப்போது மீண்டும் அது 35 கிலோ மீட்டர் என்று ஆக்கப்பட வேண்டும் என்கிறீர்கள், அடுத்த ஆண்டு 40 கிலோ மீட்டர் என்று கேட்பீர்கள். இப்படி ஒவ்வொரு முறை யும் அவை கூடுகிறபோது, இப்படி ஐந்து, ஐந்து என்று கூட்டிக் கொண்டே போனால் அது நடக்காத காரியம்.

திரு. ச. அங்குசாமி: கன்னங்குடிக்கு இரண்டு பேருந்து களும் ரூட் பஸ்களாக சென்று கொண்டிருக்கின்றன. அதிலே அதிகக் கட்டணம் வசூலிக்கப்படுவதால் மக்கள் அதைக் கொடுத்து போகக் கூடிய பொருளாதார வசதி இல்லை. அதனால் தான் வருமானம் குறைவாக இருக்கிறது என்று போக்குவரத்து அதி காரிகள் கணக்கு எடுத்து இருக்கிறார்கள். ஆகவே நகரப் பேருந்தை விட்டால் அதற்கு நல்ல கலெக்ஷன் கிடைக்க வாய்ப்பு இருக்கும். ஆகவே நகரப் பேருந்து விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: நான் ஏற்கனவே சொன் னேன். 14 தனி நடைகள் சென்று கொண்டிருக்கின்றன. நகரப் பேருந்து விடப்பட்டால் அது மட்டும் தான் ஓடும், 14 தனி நடைகள் நிறுத்தப்பட வேண்டியிருக்கும். ஆகவே இது பற்றி அரசு பரிசீலனை செய்து தகுந்த நடவடிக்கை எடுக்கும்.